# <u>சாதாரண கூட்டம்.</u>

2023– ம் ஆண்டு மார்ச் மாதம் 29–ம் தேதி புதன்கிழமை காலை **10.30 மணிக்கு சாதரணக் கூட்டம் வடலூர் நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் கீழ்காணும் பொருள்கள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.**

**முன்னிலை திரு. சு. சிவக்குமார்**
**நகர்மன்ற தலைவர்**
**வடலூர் நகராட்சி**

**மன்றப்பொருள் எண்: 1**

வடலூர் நகராட்சி வார்டு எண் பார்வதிபுரம் புல எண் 227ல் NLC நிறுவனம் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிமுடிக்கபட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர மின் இணைப்பு பெற இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் – வடலூரிலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.**55900/–** மட்டும் TANGEDCO – Cuddalore என்ற பெயரில் வழங்க ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு.

**கோப்பு எண். 739/2022/இ1**

**ஆணையர் குறிப்பு:** பொது மக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 2**

கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சி சார்பில் **01.03.2023** அன்று பிறந்த நாள் காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி தமிழ் தினசரி நாளிதழ்களில் வளிம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற கீழ்காணும் விவரப்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | நாளிதழ்களின் பெயர் | தொகை செலுத்தப்பட வேண்டிய முகவரி | செலுத்தப்படவேண்டிய தொகை. |
|---|---|---|---|
| 1 | தமிழ்முரசு | KAL PUBLICATIONS(P) LTD | 18000/– |
| 2 | தினகரன் | KAL PUBLICATIONS(P) LTD | 42000/– |
| 3 | தினத்தந்தி | DAILY THANTHI | 22260/– |
| 4 | இந்து தமிழ் | KN MEDIA SERVICE | 28560/– |
| 5.. | தினமலர் | DININA MALAR | 18900/– |
| 6. | மாலை மலர் | MALAR PUBLICATIONS | 12600/– |

கோப்பு எண். 429 /2023/அ1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் எண்: 3**

கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சியில் ரூ. 585 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற உள்ளதைத் தொடர்ந்து வடலூர் நகராட்சிக்கு சொந்தமான வள்ளலார் பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 1652/2023/மாதி 1: நாள் 28.02.2023 னை தொடர்ந்து மேற்படி பழைய பேருந்து நிலையத்தினை இடித்து அப்புறப்படுத்த ஏல விதிமுறைகளின்படி குறுகிய கால பொது ஏல விளம்பரம் ஜூனியர் குரல் என்ற தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 9980/–JUNIOR KURAL என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண் 371/2023/இ1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 4**

வடலூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் விவரப்படியான குத்தகை இனங்களுக்கு 2025 முதல் 2026 முடிய உள்ள காலங்களுக்கு பொது ஏல அறிவிப்பு தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.22260/– தினத்தந்தி என்ற பெயரில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண் 418/2023/இ1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 5**

AMRUTH 2.0 - 2022-2023 திட்டத்தில் ரூ. 61.00 இலச்சம் மதிப்பீட்டில் வடலூர் நகராட்சி வார்டு 10 ஆபத்தாரணபுரம் மூச்சன்குளம் தூர்வாரி புனரமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 61.00 | மதிப்பீட்டிற்கு –0.20% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன் | 61.00 | மதிப்பீட்டிற்கு +1.25% மதிப்பீட்டை விட அதிகம் |

**ந.க.எண். 489/2023/இ1**

**ஆணையர் குறிப்பு :**

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட –0.20% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளது மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்: 6**

கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சியில் ரூ. 585 லட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற உள்ளதைத் தொடர்ந்து, வடலூர் நகராட்சிக்கு சொந்தமான வள்ளலார் பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 1652/2023/மாதி 1 நாள் 28.02.2023 னை தொடர்ந்து 17.03.2023 அன்று பொது ஏலம் கோரப்பட்டதில் கீழ் காணும் விவரப்படி வரப்பெற்ற ஏல விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்துபுள்ளி முன்வைப்புத் தொகை (ரூ. லட்சத்தில்) | ஏலத்தொகை (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | சாய் சக்தி & Co.- சேலம் | 0.50 | குறைந்தபட்ச ஏலம்<br>ரூ. 58000/–குறைவு |
| 2 | M/S PPS & Co. | 0.50 | அதிகபட்ச ஏலம்<br>ரூ. 59000/– அதிகம். |

ந.க.எண் 371/2022/இ1

**ஆணையர் குறிப்பு:** 17.03.2023 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் அதிகபட்ச ஏலம் ரூ. 59000/–க்கு ஏலம் கோரிய M/S PPS & Co.என்ற நிறுவனத்திற்கு பணியின்அவசர அவசியிம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் அனுமதிக்கு.

**மன்றப்பொருள் எண்: 7**

வடலூர் நகராட்சியில் வார்டு 01 முதல் 27 வார்டுகளில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் தீவிர வரிவசூல் செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் நேரடி அறிவுரையின்படி அனைத்து வார்டுகளிலும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திட வருவாய் ஆய்வரின் 09.02.2022ம் நாளிட்ட குறிப்பின் அடிப்படையில் ஆட்டோ மூலம் வரி மற்றும் வரியில்லா இனங்கள் 100% வசூல் செய்து இலக்கினை அடை ஆட்டோவின் மூலம் விளம்பரம் செய்திடவும், அதற்கான தோராய செலவீனம். ரூ. 15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 286/2023/அ1

**ஆணையர் குறிப்பு:** நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண் : 8**

இந்நகராட்சியின் வருவாய் பிரிவில் 2022/2023 ம் ஆண்டிற்கு வரி மற்றும் விரியில்லா இனங்களில் 100% வசூல் இலக்கினை அடைய ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திட 09.02.2023 ல் அனுமதியினை தொடர்ந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கம் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஆட்டோ ஓட்டுனரின் விவரம் | நாள் ஒன்றுக்கு ரூ.தொகை |
|---|---|---|
| 1 | திரு. ஜெ. சசிக்குமார், ஆட்டோ ஓட்டுனர் த/பெ. ஜெயராமன், நந்தனார் நகர், ஆபத்தாரணபுரம், வடலூர். | 3500/– |
| 2 | திரு.க. கார்த்திகேயன், ஆட்டோ ஓட்டுனர் த/பெ. கலியபெருமாள், ஆர்.சி, காமராஜர் நகர், வடலூர். | 3600/– |
| 3 | திரு.பா.பிரபு, ஆட்டோ ஓட்டுனர் த/பெ. பாலு,காமராஜர் நகர், வடலூர். | 3550/– |

ந.க.எண்.286/2023/அ1

**ஆணையர் குறிப்பு:** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் திரு.ஜெ. சசிக்குமார் ஆட்டோ ஓட்டுனர், நந்தனார் நகர், ஆபத்தாரணபுரம், வடலூர். அவர்கள் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண் : 9**

வடலூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான JCB இயந்திரம் புதியதாக 15வது நிதிக்குழு மான்யத்தில் 36,00,000/– மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் 03.01.2023 அன்றைய குறிப்பினை அடிப்படையில் அவ்வாகனத்தினை இயக்குவதற்கு மாவட்ட ஆட்சியரின் சந்தை விகிதத்தில் தற்காலிகமாக ஓட்டுனர் குழுவின் மூலமாக பணி செய்திடவும், மேலும் புதியதாக வாங்கப்பட்ட இரண்டு பொலிரோவாகனத்திற்கு தற்காலிகமாக இரண்டு ஓட்டுனர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் சந்தை விகிதத்தில் குழுவின் மூலமாக ஊதியம் வழங்கிட மூன்று மாதத்திற்கு தோராய செலவினம் 2,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 08/2023/எச்1

**ஆணையர் குறிப்பு:**

நிர்வாக நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தற்காலிகமாக குழு மூலமாக பணி செய்யதமைக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் சந்தை விகிதத்தில் ஊதியம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான JCB இயந்திரம் புதியதாக 15 வது நிதிக்குழு மான்யத்தில் 36,00,000/– மதிப்பீட்டில் வாங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அவ்வாகனத்திற்கு முதல் சர்வீஸ் செய்வதற்கு வாகனத்தினை வாங்கப்பட்ட DYNATECH நிறுவனத்திற்கு வாகனத்தினை சர்வீஸ் செய்து அதற்கான ஆயில்மாற்றபட்டமைக்கு DYNATECH நிறுவனத்திலிருந்து கேட்பு பட்டியல் வரப்பட்டுள்ளது. வரப்பட்டுள்ள பட்டியலுக்கு ரூ. 2329/– செலுத்திட துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் 20.02.2023 நாளிட்ட குறிப்பின் அடிப்படையில் மேற்காணும் நிறுவனத்திற்கு ரூ. 2329/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 03/2023/எச்1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 11**

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வடலூர் நகராட்சியின் மக்கள் தொகை 39314 ஆகும், இந்நகராட்சியில் உருவாகும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளின் அளவு நாளொன்றுக்கு 8.00 டன் ஆகும். இக்குப்பைகளை கொட்டி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்தெடுப்பதற்கு இந்நகராட்சியில் போதுமான இடவசதி இல்லாத கராணத்தினால் இந்நகராட்சிக்கு அருகில் உள்ள தென்குத்து கிராமத்தில் புல எண் 128/1 ல் 1.30 ஏக்கர் மற்றும் 128/7ல் 1.40 ஏக்கர் ஆகக் கூடுதல் 2.70 ஏக்கர் தனியார் நிலம் ஆண்டு குத்தகைக்கு பெறப்பட்டு ஆண்டுதோறும் குத்தகை தொகை ரூ.46000/– செலுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது மேற்படி, நில உரிமைதாரர்கள் 2023– 20224 ம் ஆண்டிற்கான குத்தகை தொகையினை உயர்த்தி தலா 28000/– வீதம் இரண்டு நில உரிமைதாரர்களுக்கு ரூ. 56000/– வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்கள். எனவே, மேற்படி உயர்த்தப்பட்ட வாடகை தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். 03 /2022எச்1

**ஆணையர் குறிப்பு:** இந்நகராட்சியின் பொது சுகதார அவசியம் கருதி மேற்படி உயர்த்தப்பட்ட வாடகை தொகை ரூ. 56000/– இரண்டு நில உரிமைதாரருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 12**

வடலூர் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பணி புரிந்துவரும் தூய்மை பணியாளர்கள், அலுவலக உதவியாளர், குடிநீர் திட்ட உதவியாளர்களுக்கு 2022/2023 ஆண்டிற்கான சீருடைவழங்கு வதற்கு துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் 13.01.2023ம் நாளிட்ட குறிப்பினை ஏற்று சீருடை வாங்கி வழங்கிடவும்,

அதற்கானதையற் கூலி வழங்கிடவும், அதற்கானசெலவினம் ரூ. 45000/— க்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

கோப்பு எண். 10 /2023/எச்1

**ஆணையர் குறிப்பு:** நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று சீருடை வாங்கி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 13**

வடலூர் நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்களின் வாகனம் TN-31-CE-8496 MAH SCORPIO க்கு முன்புறம் சைடு பிஸ்ட் டோர் ட்ரிம்கலட், சைடுமேரோரர் வெளிபுறம் உள்ள கிளாஸ் பழுதடைந்துள்ளதை சரி செய்திட நிர்வாக நலன் கருதி வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து அதற்கான கேட்புப் பட்டியல் ரூ. 11,062/—யினை ஓட்டுனர் திரு. ஆறுமுகம் அவர்களால் செலுத்தப்பட்டு வாகனத்தினை கொண்டு வரப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் தொகை ரூ.11,062/—யினை ஒட்டுனருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

கோப்பு எண். 07 /2023/இ1

**ஆணையர் குறிப்பு:** . மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 14**

வடலூர் நகராட்சியின் 2023/2024 ஆம் ஆண்டிற்கான வரவுகள் மற்றும் செலவினங்கள் 2022/2023 ம் ஆண்டிற்கு செலிவிடப்பட்டதை தொடர்ந்து 2023/2024 ஆம் ஆண்டிற்கான வரவுகள் மற்றும் செலவினங்கள் குறித்து BUDGET தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

கோப்பு எண். 07 /2023/ எச்1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் பதிவுசெய்யலாம்.

**மன்றப்பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சியில் வருவாய்பிரிவு, பொறியியல்பிரிவு, நகரமைப்புபிரிவு, பொதுப்பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு போன்ற அனைத்து பிரிவுகளில் கலர்பிரிண்டர், சொத்துவரிகேட்பு அறிவிப்பு, மன்ற கூட்டப்பொருள் ஜெராக்ஸ், பொறியியல் பிரிவில் கலர் பிரிண்ட் பணி, பொதுசுகாதாரப்பிரிவில் தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் தலைப்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு சான்றிதழ்கள் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு கலர் சான்றிதழ்கள் வழங்குவதற்கும், தோராய செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

கோப்பு எண். 03 /2023/எச்1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 16**

வடலூர் நகராட்சி வார்டு எண் **25**, சவேரியார் நகரில் பொது மக்கள் போக்குவரத்திற்கு இடையூராக உள்ள ஒரு மின் கம்பத்தை இடம் மாற்றி வைக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

கோப்பு எண். **465/2023/இ1**

**ஆணையர் குறிப்பு:** : போக்குவரத்து நலன் கருதியும், பொதுமக்கள்ளின் பாதுகாப்பு நலன் கருதியும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 17**

வடலூர் நகராட்சி வார்டு எண் **2**வடக்குத் தெரு, ஆபத்தாரணபுரம் புல எண் **94/4A2š** NLC நிறுவன உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள புதிய போர்வெல்லிற்கு மும்முனை மினசாரம் பெறுவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு

கோப்பு எண். **136 /2022/இ1**

**ஆணையர் குறிப்பு:** குடிநீர் அவசர அவசரம் கருதி மேற்படி பணியினையும், செலவினத்தையம் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 18**

வடலூர் நகராட்சி வார்டு எண் **3** கிழக்குத் தெரு, ஆபத்தாரணபுரம் NLC நிறுவனம் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி முடிக்கபட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர மும்முனை மின் இணைப்பு பெற இளமின் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் – வடலூரிலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.**58800/–** மட்டும் TANGEDCO – Cuddalore என்ற பெயரில் வழங்க ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு.

கோப்பு எண். **136 /2022/இ1**

**ஆணையர் குறிப்பு:** குடிநீர் அவசர அவசரம் கருதி மேற்படி பணிக்கான செலவினம் ரூ. **58800/–** செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 19**

வடலூர் நகராட்சி வார்டு எண் **6** ஜெயப்பிரியா நகர் ஆபத்தாரணபுரம் பகுதியில் ரூ. **57.50** இலட்சத்தில் அமைக்கப்படவிருந்த நுண்னுர மையம் அமைக்கும் பணி நிர்வாக கராணங்களால் வார்டு எண் **4** பாட்டை தெருவில் அமைக்கப்பட உள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

கோப்பு எண். **1262 /2022/இ1**

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமிதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 20**

வடலூர் நகராட்சி வார்டு 4, பாட்டை தெருவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ரூ,57.50–இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நுண்ணுர மையத்தியத்திற்கு இடையூறாக உள்ள இரண்டு மின் கம்பங்களை இடம் மாற்றி அமைக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கும்.

கோப்பு எண். 1262 /2022/இ1

**ஆணையர் குறிப்பு:** பொது சுகாதார பணியின் அவசர அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 21**

வடலூர் நகராட்சி வார்டு எண் 6 ஜெயப்பிரியா நகரில் தூய்மை பாரத இயக்கம் திட்டம் 2.0 திட்டத்தில் ரூ. 57.50 இல;ட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் (MCC) நுண் உர மையம் அமைக்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.,

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தபுள்ளி முன்வைப்புத் தொகை (ரூ. லட்சத்தில்) | ஏலத்தொகை (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/S. தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 57.50 | ரூ. – 0.10% குறைவு |
| 2 | செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன் | 57.50 | ரூ. +2.24% அதிகம் |

கோப்பு எண். 583 /2022/இ1

**ஆணையர் குறிப்பு:** மேற்காணும் பணிக்கு ரூ. –0.10% குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/S. தேவி கன்ஸ்ட்ரக்ஷன் என்ற ஒப்பந்த நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் பிதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்: 22**

வடலூர் நகராட்சியில் 15th CFC – Untied Grant 2022–2023 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி 11919/2022/CFC நாள் 15.05.2022. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண், 25 நடேசனார் நகர் 15வது தெரு தார்சாலை மறு சீரமைப்பு செய்தல் பணி. | 10.70 |
| 2. | வார்டு எண்.2, வள்ளி கந்தன் நகர் 15வது தெரு, வார்டு 25 நடேசனார் நகர் 10 வது வார்டு தெரு, 11வது தெரு மற்றும் 12வது தெரு தார்சாலைகளை மறு சீரமைப்பு செய்தல். | 15.00 |
| 3. | வார்டு எண். 25, சவேரியார் நகர் 1 வது தெரு, நடேசனார் நகர் 9வது தெரு சிமெண்ட் சாலைகளை மறு சீரமைப்பு | 16.80 |

| | | |
|---|---|---|
| | செய்தல் | |
| 4. | வார்டு எண்,25, நடேசனார் நகர் மெயின் ரோடு சிமெண்ட் சாலையினை மறு சீரமைப்பு செய்தல். | 13.50 |
| கூடுதல் | | 56.00 |

கோப்பு எண். 459 /2023/இ1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்:** 23

வடலூர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்திம் 2022-2023 ன் கீழ் அட்டவணையில் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் – செங்கல்பட்டு அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண் 1280/2022/பி1 நாள் 20.03.2023.மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்,

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) | அரசு பங்கு தொகை | பொது மக்கள் பங்கு தொகை |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.17 புதுநகர் பள்ளியில் கழிப்பிடம் கட்டும் பணி | 3.63 | 2.42 | 1.21 |
| 2 | வார்டு எண்.17 புதுநகர் பள்ளியில் சிசிடிவி கேமரா பொருத்தும் பணி | 10.00 | 6.67 | 3.33 |
| 3 | வடலூர் நகராட்சிக்கு 8 எண்ணிக்கை BOV வாகனம் வாங்கும் பணி | 16.00 | 10.67 | 5.33 |
| | **மொத்தம்** | **29.63** | **19.76** | **9.87** |

கோப்பு எண். 349/2023/இ1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்:** 24

வடலூர் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண் 36, நாள் 10.03.2023 , ன்படி SUIDF 2022–2023 திட்டத்தின் கீழ் வார்டு 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள 2809 தெரு விளக்குகளை ரூ 3.05 கோடியில் LED விளக்குகளாக மாற்றும் பணிக்கு வரப்பெற்ற நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
கோப்பு எண்.410 /2023/இ1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்: 25**

வடலூர் நகராட்சி வார்டு எண் 1, பூசாலிகுப்பத்தில் தூய்மை பாரத இயக்கம் திட்டம் 2.0 திட்டத்தில் ரூ,43.00 இல;ட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் Material Recovery Facilities (MRF)க்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விவரப்படியான ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தபுள்ளி முன்வைப்புத் தொகை (ரூ. லட்சத்தில்) | ஏலத்தொகை (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/S. தேவி கன்ஸ்ட்ரக்ஷன் | 43.00 | ரூ. 0.10% குறைவு |
| 2 | செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன் | 43.00 | ரூ. +1. 23% அதிகம் |

கோப்பு எண். 1262/2022/இ1

**<u>ஆணையர் குறிப்பு</u>:** : மன்றம் பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள் எண்: 26**

வடலூர் நகராட்சி – வடலூர் நகராட்சின் பொது சுகாதாரப்பிரிவில் இரண்டு BOV வாகனம் 2018-2019 ம் ஆண்டில் வாங்கப்பட்டு வாகனம் இயங்கிய நிலையில் தற்சமயம் வாகனம் பழுதுகாளகி பொது சுகாதார தூய்மை பணியில் சுணக்கம் ஏற்பட்ட நிலையில் வாகனத்தின் பழுதுகள் சரிசெய்திடவும் அதற்கான தோரராய செலவினம் ரூ.2,90,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

கோப்பு எண்.1355 /2022/எச்1

**ஆணையர் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்
நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 27**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டம் மற்றும் அரசாணை (நிலை) எண் 01 , சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந 4-1 துறை, நாள் 13.01.2023.ல் படி 1 முதல் 5 ஆம் வகுப்பு வரைஅரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட வரப்பெற்ற ஆணைக்கிணங்க, வடலூர் நகராட்சியில் வார்டு எண் 1 பூசாலி குப்பம் , அரசு உயர்நிலை பள்ளி வாளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற் கூடம் கட்ட இந்நகராட்சி பொறியாளரின் மதிப்பீட்டின்படி 25.00 இலட்சம் ஆகும். மேற்படி ஒருங்கிணைந்த சமையற் கூடம் கட்டவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.
கோப்பு எண் 488/.2023/அ1

**ஆணையர் குறிப்பு:** மேற்படி பணியானது தமிழக அரசின் சிறப்பு திட்டம் என்பதால் அதனை செயல்படுத்திட ஆகும் செலவினம் ரூ.25.00 இலட்சம் இந்நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ளவும், அதற்கான அரசு நிதி கிடைக்கப் பெறின் அதனை மேற்படி கல்வி நிதி கணக்கில் ஈடு செய்து கொள்ளவும் நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் எண்: 28**

கடலூர் மாவட்டம், வடலூர் நகராட்சியில் ரூ. 585 லட்சம் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்க 08.02.2023 தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் அட்டவணையில் கண்டுள்ள ஒப்பந்ததாரர் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஓப்பந்தபுள்ளி முன்வைப்புத் தொகை (ரூ. லட்சத்தில்) | ஏலத்தொகை (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| 1 | M/s. Sai Sakthi & Co, Chinnathirupathi, Salem District | 5.85 | ரூ. – 0.50% குறைவு |
| 2 | M/s. Threekay Builders, Tuticorin | 5.85 | ரூ. +13.00% அதிகம் |
| 3 | M/s. P.P.S. & Co, Omalur | 5.85 | ரூ. – 0.25% குறைவு |
| 4 | M/s. Chendur Infrastructure Pvt Ltd, Chennai | 5.85 | ரூ. – 0.10% குறைவு |

ந.க.எண் **371/2022/இ1**

**ஆணையர் குறிப்பு :**

1. வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. சாய் சக்தி அன் கே ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட –0.50% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளது அங்கீகரித்து பணி உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும். பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. மன்றம் பதிவு செய்யலாம்.